# குழந்தைகளை பாருங்கள்! வாழ்வை புதிதாய் தொடங்குங்கள்! 1



குழந்தை வளர்ப்பில் நீங்கள் செய்ய வேண்டிய முதல் காரியம் என்னவென்றால், பழுதுபட்ட உங்கள் உள்ளங்களின் பாதிப்பு அவர்களுக்கும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதுதான். இதுதான் சிறந்த முறையில் குழந்தை வளர்ப்பதன் முதல் படி. பழுதுபட்ட தீய மனங்களின் பாதிப்பிற்கு அவர்கள் பின்னாளில் ஆளாவதற்கு வாய்ப்புகள் அதிகம்தான். ஏனெனில் அத்தகைய மனிதர்கள் உலகமெங்கும் இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து உங்கள் குழந்தைகளைத் தனிமைப்படுத்திவிட முடியாது. அப்படியென்றால் நீங்கள் கேட்கக்கூடும், 'நான் என்ன செய்வது? என் குழந்தையின் கல்வி எப்படி இருக்க வேண்டும்? என் குழந்தையை எப்படி வளர்க்க வேண்டும்?' என்று.

புத்திசாலித்தனமாகவும், விழிப்புணர்வோடும் வளரும் விதமாக உங்கள் குழந்தைகளை ஊக்குவியுங்கள். ஒவ்வொரு உயிருக்கும் தன் வாழ்வை நல்ல முறையில் வாழ்வதற்குத் தேவையான புத்திசாலித்தனம் தரப்பட்டிருக்கிறது. ஒரு உயிர், எறும்பாகப் பிறந்தாலும் கூட, அதன் வாழ்க்கையை வாழ்வதற்குத் தேவையான புத்திசாலித்தனம் அதற்குத் தரப்பட்டிருக்கிறது. நீங்கள் செய்கிற விஷயங்களையெல்லாம் அந்த எறும்பு செய்யாமல் போகலாம். ஓர் எறும்பாக வாழ்வதற்குத் தேவையான புத்திசாலித்தனம் அதனிடம் இருக்கிறது. இது ஒவ்வொரு உயிருக்கும் பொருந்தும். உங்கள் வாழ்க்கையை முழுமையாக வாழ்வதற்கான புத்திசாலித்தனம் உங்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது.

இப்போது என்ன சிக்கல் என்றால், உங்கள் வழியில், உங்கள் புத்திசாலித்தனத்திற்கேற்ப குழந்தை வாழ வேண்டுமென்று நினைக்கிறீர்களே தவிர, உங்கள் குழந்தையின் புத்திசாலித்தனத்திற்கேற்ப வாழ வேண்டுமென்று நினைக்கவில்லை. உங்கள் குழந்தைக்கு தச்சுவேலை செய்வதில் தலைசிறந்து வரவேண்டுமென்கிற கனவு இருக்கக்கூடும். ஆனால் உங்களுக்கோ உங்கள் பிள்ளை ஒரு மருத்துவராக வர வேண்டும் என்று ஆசை. உலகெங்கும் மருத்துவர்களுக்கான தேவையிருக்கிறது என்கிற விழிப்புணர்வின் காரணமாகவோ அல்லது நோய்வாய்ப்பட்டவர்களுக்கு நிவாரணம் தர வேண்டும் என்கிற கருணையின் காரணமாகவோ உங்கள் குழந்தையை மருத்துவராக அர்ப்பணிக்க வேண்டுமென்று நீங்கள் நினைக்கவில்லை. இந்த சமூகக் கட்டமைப்பில் மருத்துவர், பொறியாளர் என்று ஒரு குழந்தையை உருவாக்குவதுதான் கவுரவம் என்கிற முட்டாள்தனமான எண்ணம் உங்கள் மனதில் ஓடிக் கொண்டிருக்கிறது. 'என் குழந்தை மருத்துவர்' என்று உலகெங்கும் பெருமையடித்துக் கொள்ள உங்களுக்கு ஆசை. உங்கள் குழந்தையின் மூலமாக வாழ்க்கையை வாழ விரும்புகிறீர்கள். இது குழந்தைகளை பெருமளவில் பாதிக்கும். குழந்தைகளைப் பாழாக்க இத்தகைய அணுகுமுறை வழிவகுக்கும்.

நீங்கள் செய்ததையே உங்கள் குழந்தை செய்ய வேண்டுமென்ற அவசியமில்லை. நீங்கள் செய்வதற்கு கனவிலும் துணியாத விஷயங்களையெல்லாம் உங்கள் குழந்தை செய்ய வேண்டும். உங்களால் எண்ணிப் பார்க்கக் கூட துணிச்சல் இல்லாத விஷயத்தை உங்கள் குழந்தை செய்து காட்ட வேண்டும். அப்போதுதான் இந்த உலகம் வளரும். சொல்லிக் கொள்ளும் விதமாக ஏதேனும் நிகழும்.

– சத்குரு ஜகி வாசுதேவ்